





**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*





# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 29.12.2019

Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விளையாட்டு நிகழ்வுகள்








## தமிழக நிகழ்வுகள்

- **ஆறாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு சென்னையில் டிசம்பர் 28 தொடங்கியது.** இந்த மாநாட்டுக்கு மோரீஷஸ் முன்னாள் குடியரசுத்தலைவர் பரமசிவம் பிள்ளை வையாபுரி தலைமை வகித்தார். மூன்று நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டை தமிழக தொழில்துறை அமைச்சா எம்.சி.சம்பத் தொடக்கி வைத்தார்
  - தமிழகத்தில் ஹுண்டாய் நிறுவனம் வரும் மார்ச் மாதத்துக்குள் 50 ஆயிரம் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்காக ரூ. 7 ஆயிரம் கோடி முதலீடு செய்துள்ளதாக தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.
  - **செய்தி துளிகள் :**
    - கடந்த 2016-ஆம் ஆண்டு புள்ளியல் கணக்கின்படி, தமிழகத்தில் 37,220 தொழிற்சாலைகள் உள்ளது. இந்த தொழிற்சாலைகளில் 24 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். இதன்மூலம் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது. இந்திய அளவில் தொழில்துறை மூலதனம், உற்பத்தியில் குஜராத், மகாராஷ்டிராவுக்கு அடுத்து தமிழகம் 3-ஆவது இடத்தில் உள்ளது. இதன்மூலம், தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

## தேசிய நிகழ்வுகள்



WeShine Academy TM

- மறைந்த முன்னாள் **மத்திய அமைச்சர் அருண் ஜெட்லியின் பிறந்த தினம் டிசம்பர் 28 அன்று பீகார் மாநிலத்தில் அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.**
    - அதன் ஒருபகுதியாக, ஜெட்லியின் உருவச் சிலையை அந்த மாநில முதல்வர் நிதீஷ் குமார் திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சியில், பீகார் துணை முதல்வர் சுஷில் மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் அருண் ஜெட்லி குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
    - **செய்தி துளிகள் :**
        - சுப்ரீம் கோர்ட்டில் வழக்கறிஞராக பணியாற்றினார்.
        - டெல்லி உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராக இருந்தவர்.
        - 1975ல் இந்திரா காந்தி அரசுக்கு எதிராக அவசர நிலை காலத்தில் தீவிரமாக செயல்பட்டார்.

## சர்வதேச நிகழ்வுகள்

- அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்டீனா கோச் எனும் விண்வெளி வீராங்கனை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் 288 நாட்கள் தங்கி இருந்து சாதனை படைத்துள்ளார்.
    - அமெரிக்கா, ரஷியா உள்பட **13 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையத்தை அமைத்துள்ளன.** கிறிஸ்டீனா கோச் என்ற விண்வெளி வீராங்கனை கடந்த மார்ச் மாதம் 15-ஆம் தேதி சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு சென்றார். டிசம்பர் 28 அவர் சர்வதேச

விண்வெளி நிலையத்தில் 288 நாட்கள் தங்கியிருந்து சாதனை படைத்துள்ளார்.

- **செய்தி துளிகள் :**
  - ஒற்றை விண்வெளி பயணத்தில் சக நாட்டு விண்வெளி வீராங்கனையான பெக்கி விட்சன் என்பவரின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.
  - அடுத்த ஆண்டு பிப்ரவரி 6-ம் தேதி கிறிஸ்டீனா கோச் பூமிக்குத் திரும்ப உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **உலகளவில் ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நடத்திய முதல் நாடு என்ற பெருமையை ரஷ்யா** பெற்றுள்ளது.
  - நம்மை யாராலும் நெருங்க முடியாது. ரஷ்யா புதிய வகை ஆயுதங்களை உருவாக்குவதில் உலகை வழி நடத்துகிறது” என்று ரஷ்ய அதிபர் புதின் தனது அதிகாரிகளுடன் பெருமையுடன் தெரிவித்துள்ளார்.
  - **செய்தி துளிகள் :**
    - கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதமே ஹைபர்சோனிக் ஏவுகணை குறித்து புதின் முதன் முறையாக பேசி இருந்தார்.
    - ஹைபர்சோனிக் ஏவுகணைகள் ஒலியைவிட 5 மடங்கு வேகமாக பயணிக்கும் என்றும் புதின் தெரிவித்துள்ளார்.

We Shine Academy TM

# விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்த ஆண்டு அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் பட்டியல் - பேட் கம்மின்ஸ் முதலிடம்**
  - நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுகளை அள்ளிய ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பேட் கம்மின்ஸ் உலகின் "நம்பர் ஒன்" பவுலராக வலம் வருகிறார்.
  - **செய்தி துளிகள் :**
    - 2018-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பிறகு நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தான் அவர் எல்.பி.டபிள்யு. செய்து இருக்கிறார்.
    - அவர் தனது டெஸ்ட் வாழ்க்கையில் 6 விக்கெட் மட்டுமே எல்.பி.டபிள்யு. முறையில் வீழ்த்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள்

**குறள் எண் : 61**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : மக்கட்பேறு

**குறள் :**

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற.**

**விளக்கம் :** ஒருவன் அடையக்கூடியவற்றுள், அறிய வேண்டியவற்றை அறிய வல்ல மக்களைப் பெருவதைவிடச் சிறந்ததொன்று இருப்பதாக யாம் அறியவில்லை.

We Shine Academy™